



# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"





Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 268 | 22.03.2026 | SUNDAY | PANGUNI: 8 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 268 | 22.03.2026 | ஞாயிற்றுக்கிழமை | பங்குனி : 8 | விலை : ரூ.5/-

## தடையில்லா கப்பல் போக்குவரத்தை

# "உறுதி செய்ய வேண்டும்"

## ஈரான் அதிபரிடம் பிரதமர் மோடி வலியுறுத்தல்

புதுடில்லி: மார்ச்.22-

தடையில்லா கப்பல் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று ஈரான் அதிபர் மசூத் பெஷேஷ்கியானிடம் பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்கா, இஸ்ரேலுடனான போர் 22ம் நாளை எட்டியுள்ள நிலையில், ஈரான் அதிபர் மசூத் பெஷேஷ்கியானிடம் பிரதமர் மோடி தொலைபேசியில் உரையாடினார். அப்போது, பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்டவும், உலகளாவிய விநியோகச் சங்கிலி பாதிக்கப்படுவது குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர்.



இது தொடர்பாக அவர் விடுத்த எக்ஸ் தளப்பதிவில்; ஈரான் அதிபர் மசூத் பெஷேஷ்கியானுடன் உரையாடினேன். அப்போது, ரம்ஜான் மற்றும் வசந்த கால துவக்கத்திற்கான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டேன். இந்தப் பண்டிகை காலம், மேற்காசிய பிராந்தியத்தில் அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பைக் கொண்டுவரும் என்று இருநாட்டு தலைவர்களும் நம்பிக்கை தெரிவித்தோம்.

ஈரானின் முக்கியக் கட்டமைப்புகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இது போன்ற தாக்குதல்களால், பிராந்திய நிலைத்தன்மையை சீர்குலைப்பதோடு, உலகளாவிய விநியோகச் சங்கிலியும் பாதிக்கப்படுகின்றன.

பாதுகாப்பான மற்றும் தடையில்லாத கடல் போக்குவரத்தை உறுதி செய்ய வலியுறுத்தினேன். ஈரானில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்வதற்காக அந்நாட்டு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பாராட்டு தெரிவித்தேன், இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கு ஆசியாவில் போரின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், இரு நாட்டுத் தலைவர்களின் இந்த உரையாடல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

## புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தல்: 9 வேட்பாளர்களை அறிவித்தது பாஜக!

புதுச்சேரி: மார்ச்.22-

புதுச்சேரியில் பாஜக போட்டியிடும் தொகுதிகளில் 9ல் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, ஒரு முன்னாள் அமைச்சர் தவிர அனைவருக்கும் வாய்ப்பு தரப்பட்டுள்ளது.

பாஜக மத்திய தேர்தல் குழு கட்சியின் தேசியத்தலைவர் நிதின் விபின் தலைமையில் கூடியது. இக்கூட்டத்தில் பிரதமர் மோடி, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் அமித்ஷா, மற்றும் மத்திய தேர்தல் குழு அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்றனர். இதில் புதுச்சேரி சட்டப்பேரவைக்கு பொதுத்தேர்தலுக்கான 9 தொகுதிகள் வேட்பாளர்களை தலைமைப்பொறுப்பாளரும் தேசிய பொதுச்செயலருமான அருண்சிங் வெளியிட்டுள்ளார்.




அதன்விவரம்: * மண்ணாடிப்பேட் அமைச்சர் நமச்சிவாயம், * ஊசுடு எம்எல்ஏ தீப்பாய்ந்தான், * காலாப்பேட் எம்எல்ஏ கல்யாணசுந்தரம், * ராஜ்பவன் மாநிலத்தலைவர் ராமலிங்கம், * முதலியார்பேட் அமைச்சர் ஜான்குமார், * மணவெளி சட்டப்பேரவைத் தலைவர் செல்வம், * திருநள்ளார் எம்எல்ஏ ராஜசேகரன், * நிரவி டிஆர்பட்டிணம் மீனாட்சி சுந்தரம், * மாஹே தினேசன் ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இம்முறை, மொத்தம் 10 தொகுதிகளில் போட்டியிடுவதாக பாஜக அறிவித்து தற்போது 9 தொகுதிகளுக்கு வேட்பாளர்களை அறிவித்துள்ளது. இதில் ஊசுடுவில் வென்ற பாஜக முன்னாள் அமைச்சரும், தற்போதைய எம்எல்ஏவுமான சாய் சரவணன் குமாருக்கு சீட் தரப்படவில்லை.

அதேபோல் என்.ஆர்.காங்கிரஸில் அமைச்சராக உள்ள லட்சுமி நாராயணன் போட்டியிட்டு வென்ற ராஜ்பவன் தொகுதி பாஜகவுக்கு தரப்பட்டுள்ளதால் அவருக்கு வாய்ப்பு தரப்படாது. அதேபோல் மங்கலம் தொகுதியில் அமைச்சர் தேனீ ஜெயக்குமாருக்கு சீட் தராமல் முதல்வர் ரங்கசாமி போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.

## "தமிழ்க் கடலில் தாமரை மலர முடியாது" காதர் மொய்தீன் கருத்து

திருச்சி: மார்ச்.22-

"தாமரை வளர்வது குளத்திலும் குட்டையிலும்தான். ஆனால், தமிழகம் ஒரு பெருங்கடல். இந்த தமிழ்க் கடலில் தாமரை மலர முடியாது'' என இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொய்தீன் தெரிவித்துள்ளார்.

திருச்சி கன்டோன்மென்ட் ஈத்கா மைதானத்தில் ஆற்காடு நவாப் நினைவு அறக்கட்டளை சார்பில் ரம்ஜான் சிறப்பு தொழுகை இன்று நடைபெற்றது. இதில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன், அறக்கட்டளை மக்கள் தொடர்பு அலுவலர் பஷீர் அகமது, முஸ்லிம் இலக்கிய மன்றத்தின் பொதுச் செயலாளர் கவிஞர் சையது ஜாபர் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



பின்னர் செய்தியாளர்களிடம் காதர் மொய்தீன் கூறியது: "உலகம் முழுவதும் உள்ள அனைவருக்கும் ரம்ஜான் வாழ்த்துகள். புனித ரமலான் மாதத்தில் நாம் எல்லோரும் இறைவனை வேண்டுவது உலக அமைதி நிலைக்க வேண்டும் என்பதற்காகத்தான். உலக அரசியல் சூழ்நிலை கவலை அளிக்கும் வகையில் உள்ளது.

இன்று உலகம் மிகக் கடினமான சூழ்நிலையை சந்தித்து வருகிறது. அமெரிக்கா, இஸ்ரேல் ஈரான் நாடுகளுக்கு இடையேயான பதற்றம் உலக மக்களை பாதித்து வருகிறது. இந்தச் சூழலில் அனைத்து நாடுகளும் அமைதியை முன்னிறுத்த வேண்டும். உலகுக்கு இன்று தேவையானது போர் அல்ல, அமைதிதான்.

நேற்று வரை நான்கு முனைப் போட்டியாக இருந்த தேர்தல், தற்போது ஐந்து முனை போட்டியாக மாறியுள்ளது. புதிய கூட்டணிகள் உருவாவது ஜனநாயக நாட்டில் இயல்பான ஒன்றுதான். இன்னும் பலமுனை போட்டிகளாக கூட மாறலாம்.

யாரும் தேர்தலில் போட்டியிடலாம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முன்னேற்ற கூட்டணி மிகவும் வலிமையானது. ஐந்து ஆண்டுகளில் நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சியால் 80%க்கும் மேற்பட்ட மக்கள் திருப்தி அடைந்துள்ளனர். இந்த ஆட்சி தொடர வேண்டும் என்ற எண்ணம் மக்களிடம் உள்ளது.

எந்த அளவுக்குப் போட்டி இருந்தாலும், இந்த தேர்தலில் திமுக கூட்டணிக்கே வெற்றி வாய்ப்பு அதிகம். அதிமுக கூட்டணி குறித்து அடிக்கடி டெல்லி சென்று பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். ஆனால், இங்கு வந்து கூட்டணி குறித்து தெளிவாகப் பேசுவதில்லை. இது, தமிழக முதல்வர் கூறியதுபோல, இந்த தேர்தல் தமிழ்நாட்டுக்கும், டெல்லிக்கும் இடையிலான போட்டியாக மாறி வருகிறது என்பதை காட்டுகிறது.

தமிழகத்தில் திராவிட சிந்தனை, தமிழ்ப் பண்பாடு வேரூன்றி உள்ளது. இந்த மண்ணில் பாஜக கொள்கைக்கு இடமில்லை. தாமரை வளர்வது குளத்திலும் குட்டையிலும் தான். ஆனால் தமிழகம் ஒரு பெருங்கடல். இந்த தமிழ்க் கடலில் தாமரை மலர முடியாது'' என்றார்.

## ராமதாஸ் சசிகலா கூட்டணி: தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 'அதிர்ச்சி'... ஏன்?

சென்னை, மார்ச்.22-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் ஏற்கெனவே 4 முனைப் போட்டி உறுதியான நிலையில், 5வது முனைப் போட்டியாக ராமதாஸ் சசிகலா கூட்டணி உருவாகியுள்ளது. இந்த அணியால் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஏற்படப்போகும் பாதிப்புகள் குறித்து பார்ப்போம்.


தமிழக அரசியலில் திடீர் திருப்பமாக ராமதாஸ் சசிகலா கட்சிகளின் கூட்டணி அமைந்துள்ளது. பாமகவில் தனது மகன் அன்புமணியின் செயல்பாடுகள் பிடிக்காமல், தனிக் கட்சியாக செயல்பட்டு வருகிறார் ராமதாஸ்.

அதேநேரத்தில் ஜெயலலிதா இருந்தபோது அதிமுகவின் உச்சபட்ச அதிகார மையமாக இருந்த சசிகலா, எடப்பாடி பழனிசாமியால் ஓரங்கட்டப்பட்டு இப்போது அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் என்ற கட்சியின் பொதுச் செயலாளராக செயல்பட்டு வருகிறார்.

மகனால் புறக்கணிக்கப்பட்ட ராமதாஸூம், தான் முதல்வர் ஆக்கியவராலேயே ஓரங்கங்கட்டப்பட்ட சசிகலாவும் இணைந்து புதிய கூட்டணியை உருவாக்கியுள்ளனர்.

தமிழகத்தில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, நாதக, தவெக என நான்கு முனைப் போட்டி நிலவும் நிலையில், தற்போது 5வது முனையாக சசிகலா ராமதாஸ் கூட்டணி உருவெடுத்துள்ளது.

சசிகலாவின் அபுமமுகவுக்கு தேர்தல் ஆணையம் தென்னந்தோப்பு சின்னத்தை ஒதுக்கியுள்ளது. அதேநேரத்தில், ராமதாஸூக்கு தற்போது வரை கட்சியின் பெயரோ, சின்னமோ இல்லை. பாமகவின் பெயர் மற்றும் சின்னம் ஆகியவை தற்போது அன்புமணியின் வசம் உள்ளது. இனி தேர்தலுக்குள் ராமதாஸ் புதிய கட்சியை தொடங்கவும் வாய்ப்பு இல்லை.



எனவே, சசிகலா போல ஏற்கெனவே உள்ள ஏதேனும் ஒரு கட்சியை வசமாக்கலாம் அல்லது சுயேச்சையாக போட்டியிடலாம் என்ற வாய்ப்பு மட்டுமே ராமதாஸ் வசம் இப்போது உள்ளது. முடியாத பட்சத்தில் சசிகலா கட்சியின் தென்னந்தோப்பு சின்னத்திலேயே ராமதாஸ் தரப்பும் போட்டியிடலாம் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

ராமதாஸ் சசிகலா கூட்டணியால் யாருக்கு பாதிப்பு?

ராமதாஸ் மற்றும் சசிகலா ஆகியோர் அமைத்துள்ள கூட்டணி வெற்றிக்கோடு வரை செல்லுமா என்பதை பற்றியெல்லாம் யோசிக்க தேவையில்லை. ஆனால், இவர்களின் கூட்டணி நிச்சயமாக வட மற்றும் தென் மாவட்டங்களில் கணிசமான பாதிப்பை உருவாக்கும்.

ஏனென்றால், பாமக கட்சி ரீதியாகவும், அமைப்பு, நிர்வாக ரீதியாகவும் அன்புமணியின் வசம் இருந்தாலும், வன்னியர் சமூகத்தின் அடையாளமாக ராமதாஸ்தான் உள்ளார். எனவே வட மாவட்டங்களில் உள்ள சுமார் 100 தொகுதிகளில் ராமதாஸூக்கு குறிப்பிடத்தக்க ஆதரவு உள்ளது.

அதேபோல, டெல்டா மற்றும் தென் மாவட்டங்களில் முக்குலத்தோர் சமூகம் அடர்த்தியாக உள்ள சுமார் 60 முதல் 80 தொகுதிகளில் சசிகலாவுக்கு ஓரளவு செல்வாக்கு உள்ளது. இதுமட்டுமின்றி இவர்கள் தங்கள் கூட்டணியில் அந்தந்த தொகுதிகளில் ஆதிக்கம் செலுத்தும் பல்வேறு சிறிய கட்சிகள், சமூக அமைப்புகள், தனிநபர்களுக்கும் வாய்ப்பளிக்க முடிவு செய்துள்ளனர்.

எனவே, இவர்கள் நிச்சயமாக 234 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்த வேண்டும் என்ற முடிவில் உறுதியாக உள்ளனர்.

வெற்றி பெறுவதெல்லாம் முக்கியமில்லை, தொகுதிக்கு 2000 முதல் 10,000 வாக்குகள் வரை பிரிப்பதே தங்களின் நோக்கம் என்று உறுதியாக உள்ளனர் சசிகலாவும், ராமதாஸூம். இவர்களின் திட்டப்படி, நிச்சயமாக சுமார் 50 தொகுதிகளிலாவது 5 ஆயிரம் வாக்குகளுக்கு மேல் இந்தக் கூட்டணி பெறும். அந்த வாக்குகள் அதிமுக, அமமுக, பாமக ஆகிய கட்சிகளுக்கு பெரும் பாதிப்பை உருவாக்கும். இதனால் தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றி வாய்ப்புக்கு பாதகம் உருவாகவும் வாய்ப்புள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

ராமதாஸின் இப்போதைய ஒரே நோக்கமாக அன்புமணியை வீழ்த்துவது உள்ளது. அதேபோல, சசிகலாவிடம் எடப்பாடி பழனிசாமி மற்றும் டிடிவி தினகரனை வீழ்த்தும் இலக்கு உள்ளது. எனவே, தங்களால் முடிந்தவரை என்டிஏ கூட்டணிக்கு அவர்கள் 'டேமேஜை' உருவாக்குவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ராமதாஸ் தரப்பில் அவர்கள் வலுவாக உள்ள மாவட்டங்களில் பொறுப்பாளர்கள் மற்றும் மாநில நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றனர்.

ஆனால், சசிகலா கட்சியில் இன்னும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் தொகுதி வாரியான பொறுப்பாளர்கள் நியமிக்கப்படவில்லை. இருப்பினும், இவர்களால் 234 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்துவது என்பது சாத்தியம் தான். ஏனெனில், இந்த முறை தனது பலத்தை காட்ட எவ்வளவு செலவு வேண்டுமானாலும் செய்ய சசிகலா தயாராக உள்ளார். இதனால், வட மற்றும் தென் மாவட்டங்களில் இம்முறை தேர்தல் களம் அனல் பறக்கும்.

4 முனைப் போட்டி என்பதால் பல தொகுதிகளில் வெற்றி என்பது சில ஆயிரம் வாக்குகளில் கூட தீர்மானிக்கப்படலாம். இதனால், 5வது முனையாக களத்தில் குதித்துள்ள ராமதாஸ் சசிகலா கூட்டணி நிச்சயமாக வட, தென் மண்டலத்தில் வெற்றியை தீர்மானிப்பதில் முக்கிய அணியாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# ஈரான் விவகாரத்தில் மோடி அரசு மவுனம் காப்பது ஏன்?.. காங். மூத்த தலைவர் கடும் கண்டனம்

புதுடெல்லி, மார்ச்.22-

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்கள் குறித்து பிரதமர் மோடி தலைமையிலான அரசு மவுனம் சாதிப்பதாக காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெயராம் ரமேஷ் குற்றம் சாட்டியுள்ளார். கடந்த 21 நாட்களாக ஈரான் நாட்டின் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் வான்வழித் தாக்குதல்களைத் தீவிரமாக நடத்தி வருகின்றன. இந்தத் தாக்குதல்களால் ஈரான் நாட்டின் ஏவுகணைத் தளங்கள் மற்றும் டிரோன் உற்பத்தி மையங்கள் உள்ளிட்ட ராணுவக் கட்டமைப்புகள் பெரும் சேதமடைந்துள்ளதாக அமெரிக்க ராணுவம் தெரிவித்துள்ளது. மேற்கு ஆசியாவில் நிலவி வரும் இந்த அசாதாரண சூழல் குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள காங்கிரஸ் தலைவர் ஜெயராம் ரமேஷ், ஒன்றிய அரசின் வெளியுறவு



கொள்கையை கடுமையாக விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் ஈரான் மீது நடத்தி வரும் மிகக்கடுமையான வான்வழித் தாக்குதல்களால் இந்தியா உட்பட உலகெங்கும் பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல்களை மோடி அரசு இதுவரை கண்டிக்கவில்லை. அதேபோல், ஈரான் நாட்டின் முக்கியத் தலைவர்கள் குறிவைத்து படுகொலை செய்யப்படுவதையும் இந்த அரசு கண்டிக்கவில்லை. ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவும், அங்கு உள்நாட்டுப் போரைத் தூண்டவும் அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்தும் ஒன்றிய அரசு வாய் திறக்கவில்லை.

வளைகுடா நாடுகளில் நிலவும் இந்தப் பதற்றத்தைத் தணிக்கவோ அல்லது போரை நிறுத்தவோ பிரதமர் மோடி எந்தவிதமான நீண்டகால திட்டத்தையோ அல்லது தூதரக ரீதியிலான முயற்சியையோ எடுக்கவில்லை. அமெரிக்க அதிபர் மற்றும் இஸ்ரேல் பிரதமருடனான தனது நட்பைப் பயன்படுத்தி, ஏன் இன்னும் போர் நிறுத்தத்தைக் கொண்டு வர முயற்சிக்கவில்லை? இந்த மவுனம் என்பது இந்தியாவின் நாகரிக விழுமியங்களுக்குச் இழைக்கப்பட்ட துரோகமாகும். அரசியல் கோழைத்தனமாகும்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த விவகாரத்தில் ஒன்றிய அரசின் மவுனம் சர்வதேச அரங்கில் இந்தியாவின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பதாக எதிர்க்கட்சிகள் விமர்சித்து வருகின்றன

# பந்தலூரில் பயங்கர காட்டு தீ: பல ஏக்கர் வனப்பகுதி எரிந்து சேதம்

பந்தலூர், மார்ச்.22-

பந்தலூர் அருகே காட்டுத்தீ ஏற்பட்டு பல ஏக்கர் வனப்பகுதி எரிந்து சேதம் அடைந்தது. நீலகிரி மாவட்டம் கூடலூர், பந்தலூர் பகுதிகளில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. சுட்டெரிக்கும் வெயில் காரணமாக வனப்பகுதிகளில் வறட்சி ஏற்பட்டு செடி, கொடிகள் காய்ந்து வருகின்றன. இந்நிலையில் பந்தலூர் பஜாரையொட்டி இன்கோ



நகர் பகுதி உள்ளது. இங்கு ஏராளமான குடியிருப்புகள் உள்ளன. குடியிருப்பு அருகே உள்ள வனப்பகுதியில் நேற்று இரவு திடீரென காட்டுத்தீ ஏற்பட்டது.

இந்த தீ, சில நிமிடங்களில் வனப்பகுதி முழுவதும் பரவ தொடங்கியது. இதில் அரியவகை மூலிகை செடிகள், மரம், வன உயிரினங்கள் கருகின. சம்பவம் குறித்து வனத்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து தேவாலா வனச்சரக ரேஞ்சர் சஞ்சீவி மற்றும் வனத்துறையினர் காட்டுத்தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். தொடர்ந்து கூடலூரில் இருந்து தீயணைப்பு துறையினர் வரவழைக்கப்பட்டு காட்டுத்தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்



# சமையல் காஸ் தட்டுப்பாடு தீவிரமாகிறது

நாகர்கோவில், மார்ச்.22-

காஸ் தட்டுப்பாடு காரணமாக கன்னியாகுமரி, நாகர்கோவிலில் இரவு நேர டிபன் சென்டர்கள், ஓட்டல்கள் மூடப்பட்டுள்ளதால், சுற்றுலா பயணிகள் பெரும் சிரமத்தை சந்தித்து வருகிறார்கள். ஈரான், அமெரிக்கா போரால் உலகம் முழுவதும் சமையல் காஸ் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தியாவின் இதன் தாக்கம் அதிகமாக உள்ளது. தமிழ்நாட்டிலும் காஸ் தட்டுப்பாடு பிரச்சினையால் ஓட்டல்கள் பெரும் சிரமத்தை சந்தித்து வருகின்றன. வெளி மார்க்கெட்டில் அதிக விலைக்கு வர்த்தக சிலிண்டர் விற்பனையாகிறது. காஸ் சிலிண்டரின் தட்டுப்பாடு, குமரி மாவட்டத்திலும் தற்போது அதிகரித்து வருகிறது. மாவட்டத்தில் சுமார் 5 ஆயிரம் ஓட்டல்கள் உள்ளன.

கேஸ் தட்டுப்பாடு காரணமாக ஓட்டல்களில், உணவு வகைகள் குறைப்பு, டீ, காபி, வடை மற்றும் உணவு பண்டங்கள் விலை அதிகரிப்பு செய்யப்பட்டு உள்ளது. சாதாரண ஓட்டல்களில் கூட தோசை வகைகள் ரூ.50 ல் இருந்து ரூ.70 ஆக உயர்ந்துள்ளது. காஸ் தட்டுப்பாடு பிரச்சினையால் காலை மற்றும் இரவு நேர டிபன் சென்டர்கள் பெரும் சிரமத்தை சந்தித்து வருகின்றன. டீ கடைகளின் நேரம் குறைக்கப்பட்டு உள்ளது. சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரியில் 300க்கும் மேற்பட்ட ஓட்டல்கள், டீ கடைகள் உள்ளன. கேஸ் தட்டுப்பாடு பிரச்சினைக்கு பிறக ஏராளமான டீ கடைகள், சிறு, சிறு ஓட்டல்கள் மூடப்பட்டுள்ளன. குறிப்பாக டிபன் சென்டர்கள் செயல்படவில்லை.

இரவு நேர டீ கடைகளும் இயங்கவில்லை. இதனால் இரவில் வரும் சுற்றுலா பயணிகள் பெரும் சிரமத்தை சந்தித்து வருகிறார்கள். ரம்ஜான் பண்டிகையையொட்டி நேற்று காலையில் இருந்து கன்னியாகுமரியில் அதிக கூட்டம் இருந்தது. இரவிலும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்திருந்தனர். ஆனால் இரவு நேர ஓட்டல்கள், தள்ளுவண்டி டிபன் சென்டர்கள் இல்லாமல் பெரும் சிரமத்தை சந்தித்தனர். இன்று (சனி), நாளை (ஞாயிறு) அதிகளவில் கூட்டம் இருக்கும். கேஸ் பிரச்சினையால் ஓட்டல்கள், டிபன் சென்டர்களை திறக்க முடியாத நிலையில் அதன் உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

ஒரு சில ஓட்டல்கள் வெளி மார்க்கெட்டில் இருந்து அதிக விலைக்கு வாங்கி பயன்படுத்துகிறார்கள். நாகர்கோவிலில் முக்கிய ஓட்டல்கள் தவிர ஏராளமான டீபன் சென்டர்கள் மூடப்பட்டுள்ளன. வடசேரி பஸ் நிலையத்தை சுற்றி இரவு நேர தள்ளுவண்டி கடைகள் இருக்கும். கேஸ் பிரச்சினையால் அவை மூடப்பட்டு உள்ளன. இதே போல் வீட்டு உபயோக சிலிண்டர் சப்ளையும் குறைந்துள்ளது. இதனால் புக்கிங் செய்து ஒரு வாரம் வரை ஆகியும் பலருக்கு சிலிண்டர் வரவில்லை. மாற்று சிலிண்டர் இல்லாமல் தவிப்புக்கு உள்ளாகி உள்ளனர்

# 75 ஆண்டுகால அறிவுச் சுடர்! பாட்டாக்குறிச்சி HNKM பாண்டியன் பள்ளியில் பவளவிழா கொண்டாட்டம்

தென்காசி : மார்ச். 22-

தென்காசி அருகே உள்ள பாட்டாக் குறிச்சி பிழிரிவி பாண்டியன் வித்தியாசாலை தொடக்கப் பள்ளியின் 75வது பவள விழா மற்றும் ஆண்டு விழா பள்ளியின் வளாகத்தில் வைத்து மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு பள்ளியின் செயலர் பி.ழி. நடராஜ பாண்டியன் தலைமை வகித்தார். தென்காசி வட்டார கல்வி அலுவலர்கள் பா. செல்வபாக்கியம், வசந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ் தாய் வாழ்த்துடன் விழா இனிதே துவங்கியது. தொடர்ந்து பள்ளியின் தலைமை



ஆசிரியர் சங்கரகுமாரசாமி வரவேற்புரை ஆற்றினார். இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக பள்ளிக் கல்விக்குழு தலைவர் சாமுண்டீஸ்வரி, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பரமசிவம், கீழப்பாட்டாக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியர் பழனி ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவின் சிறப்பு நிகழ்வாக பள்ளி மாணவ மாணவிகளின் கண்கவர் கலை நிகழ்வுகள் கண்களுக்கு விருந்து படைத்தன. இந்நிகழ்ச்சியினை பெற்றோர்களும் விழாவில் பங்கேற்றவர்களும் ஆர்வமுடன் கண்டு ரசித்தனர். சிறப்பு மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

விழாவின் சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் தென்காசி வட்டார செயலாளர் ரவி, சேக் முகமது ரபீக்,வட்டார தலைவர் மகேந்திரன், மாநில பொதுக்குழு உறுப்பினர் க. ராஜ் குமார் ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். விழாவின் நிகழ்வுகளை பள்ளியின் ஆசிரியை இசக்கி துரைச்சி தொகுத்து வழக்கினார். நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் பள்ளியின் ஆசிரியை உமா நன்றி கூறினார். நிகழ்ச்சியின் நிறைவில் நாட்டு பண்ணுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

# சென்னை - பொதுமக்களிடம் ரூ.77 லட்சம் முதலீடு வசூலித்து மோசடி: நிதி நிறுவன நிர்வாகிகளுக்கு சிறை தண்டனை

சென்னை, மார்ச்.22-

அதிக லாபம் தருவதாகக் கூறி ரூ. 77 லட்சம் வரை முதலீடுகளை வசூலித்து மோசடியில் ஈடுபட்ட நிதி நிறுவன நிர்வாகிகளுக்கு 4 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து சென்னை சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம் ஊரப்பாக்கம் ரயில் நிலையம் அருகே கிரீன் வேர்ல்டு பவுண்டேஷன் டிரஸ்ட் என்ற நிதி நிறுவனத்தை அப்பகுதியை சேர்ந்த பிரசன்னா, கோவையை சேர்ந்த சரவணன், கூடுவாஞ்சேரி நந்திவரத்தைச் சேர்ந்த நீலகண்டன் ஆகியோர் கூட்டாக நடத்தி வந்தனர்.

அதிக லாபம் தருவதாகக் கூறி ரூ.77 லட்



சம் வரை முதலீடுகளை வசூலித்த இவர்கள், உறுதியளித்த தொகையை தராமல், குறைந்த தொகையை திருப்பிக் கொடுத்துள்ளனர்.

இதையடுத்து, பாதிக்கப்பட்டவர்கள் அளித்த புகாரின்பேரில் நிதி நிறுவன நிர்வாகிகள் 3 பேர் மீதும் செங்கல்பட்டு பொருளாதார குற்றப்பிரிவு போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கு சென்னை நிதி நிறுவன மோசடி வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். முருகானந்தம் முன்பாக விசாரணைக்கு வந்தது. அரசுத் தரப்பில் சிறப்பு அரசு வழக்கறிஞர் டி.பாபு ஆஜராகி வாதிட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, குற்றம்சாட்டப்பட்ட பிரசன்னா, சரவணன், நீலகண்டன் ஆகியோருக்கு தலா 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.13.96 லட்சம் அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

இந்த அபராதத் தொகையில் முதலீட்டாளர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், இழப்பீடு போக மீதித் தொகை இருந்தால் அதை அரசின் கணக்கில் சேர்க்க வேண்டும், என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.



# பெரம்பலூரில் ரூ.95,184 மதிப்புள்ள பாத்திரங்கள் பறிமுதல்

பெரம்பலூர், மார்ச்.22-

பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நக்கசேலத்தில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு சென்ற பாத்திரத்தை வருமானவரித்துறை பறக்கும் படையினர் பறிமுதல் செய்து பெரம்பலூர் வருவாய் கோட்டாச்சியர் அனிதாவிடம் ஒப்படைத்தனர். சில்வர் குடம் 32, சில்வர் தவளை 30, பித்தளை சொம்பு 79 செப்பு சொம்பு 77, என மொத்தம் 218 பாத்திரங்கள் உள்ளன இதன் மதிப்பு ரூ.95,184 ஆகும்

# ஆசிரியர்களை அவர்கள் பணிபுரியும் அதே சட்டமன்ற தொகுதியில் தேர்தல் பணி வழங்க கோரிக்கை

தென்காசி, மார்ச்.22-

தேர்தல் பணிக்குச் செல்லும் ஆசிரியர்களை அவர்கள் பணிபுரியும் அதே சட்டமன்ற தொகுதியில் தேர்தல் பணி வழங்க வேண்டும் என தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாவட்ட செயலாளர் க.மாரிமுத்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாவட்ட செயலாளர் க.மாரிமுத்து கூறியிருப்பதாவது: 2026 சட்டப்பேரவை தேர்தலில் வாக்குச்சாவடி அலுவலர்களாக பணி புரியும் ஆசிரியர் அரசு ஊழியர்களை அவர்கள் பணிபுரியும் அந்தந்த சட்டசபை தொகுதிக்குள் நியமிக்க கோரி தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி தென்காசி மாவட்டச்செயலாளர் மாரிமுத்து தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மதிப்பிற்குரிய கமல் கிஷோருக்கு எழுதிய கடிதத்தில் கோரிக்கை வைத்துள்ளார்.

# காவலர்களுக்கு தேர்தல் காலங்களில் 8 மணி நேரப் பணி முறையை அமல்படுத்த கோரிக்கை

புதுச்சேரி, மார்ச். 22-

சமூக ஆர்வலர் அசோக் ராஜா அவர்கள், புதுச்சேரி காவல்துறை தலைமை இயக்குனர் (DGP) அவர்களிடம் அண்மையில் ஒரு முக்கிய மனுவை அளித்திருந்தார். அந்த மனுவில், "தேர்தல் நேரத்தில் மற்ற அனைத்து அரசுத் துறையினரும் 8 மணி நேரம் மட்டுமே பணியாற்றுகின்றனர். ஆனால், காவல்துறையினர் மட்டும் தொடர்ந்து 12 மணி நேரத்திற்கும் மேலாகப் பணியாற்றுவதால் அவர்களுக்கு கடும் மன அழுத்தமும், மன உளைச்சலும் ஏற்படுகிறது. எனவே, அவர்களது நலனைக் கருத்தில் கொண்டு தேர்தல் காலங்களில் 8 மணி நேரப் பணி முறையை அமல்படுத்த வேண்டும்," என்று கோரிக்கை விடுத்திருந்தார்.



அவரது கோரிக்கையைப் பரிசீலித்த காவல்துறை உயர் அதிகாரிகள், தற்போது தேர்தல் பணியில் ஈடுபடும் காவலர்களுக்கு 8 மணி நேரப் பணி முறையை உறுதி செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் அந்தந்தப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது

# சித்தையன்கோட்டையில் அதிமுக, தவெக கட்சிகளிலிருந்து விலகி திமுகவில் இணைந்த பட்டாளம்

சின்னாளபட்டி, மார்ச் .22-

சித்தையன்கோட்டை பேரூராட்சிக்குட்பட்ட சேடபட்டி மற்றும் லட்சுமிபுரத்தைச் சேர்ந்த ஊர்நாட்டாமை மற்றும் அதிமுக கிளைச் செயலாளர், முன்னாள் வார்டு உறுப்பினர் உட்பட 25 பேர் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு சால்வை அணிவித்து திமுகவில் இணைந்தனர்.

குறிப்பாக ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த அதிமுக இளைஞர் இளம்பெண்கள் பாசறையை சேர்ந்தவர்கள் மற்றும் த.வெ.க. கட்சியைச் சேர்தவர்கள் உட்பட மாற்றுக் கட்சியினர் அதிக அளவில் திமுகவில் இணைந்து வருவது குறிப்பிடத்தக்கது. சித்தையன்கோட்டை முன்னாள் வார்டு உறுப்பினர் ஜெயா, 3வது



வார்டு அதிமுக செயலாளர் மகாலிங்கம், லட்சுமிபுரம் ஊர்கவுண்டர் எல்.நாகராஜ், ரிலாக்ஸ் ராஜ், ஊர் வாரியன் ரெங்கசாமி, மகளிர் அணியைச் சேர்ந்த தனலெட்சுமி உட்பட 25 பேர் வி.கே.சசிகுமார் தலைமையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு சால்வை அணிவித்து திமுகவில் இணைந்தனர்.

திமுகவில் இணைந்தவர்களுக்கு கட்சியின் சின்னம் பொறித்து ஆடை அணிவித்து வாழ்த்திப் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, இன்று பல கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள், நிர்வாகிகள் கட்சியில் இணைகிறார்கள் என்றார் அதற்கு ஒரே காரணம் முத்தமிழ் அறிஞர் வழியில் வந்த திராவிடமாடல் ஆட்சி நாயகர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் இளைஞர்களின் எழுச்சி நாயகன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புமிகு திட்டங்களும், செயல்பாடுகளும்தான் காரணம் என்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர் நாகராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், இராஜேந்திரன், பிள்ளையார்நத்தம் முருகேசன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் டி.பண்ணைப்பட்டி அருண்ஜெகநாதன், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் இராஜேந்திரகுமார், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, வண்ணம்பட்டி காணிக்கைசாமி, சுமதி கணேசன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால் (எ) மணி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், சித்தையங்கோட்டை பொறியாளர் அணியைச் சேர்ந்த காதர்மைதீன், ஊர் காலாடி முனியாண்டி, 17 வது வார்டு செயலாளர் முருகன் உட்பட திமுகவினர் பலர் உடனிருந்தனர்.

# திருச்சி கிழக்கில் 'தீப்பெட்டி' பற்றுமா? மதிமுக எதிர்பார்ப்பு




திருச்சி, மார்ச்.22-

திமுக கூட்டணியில் ஒரு தொகுதியில் சொந்த சின்னத்தில் மதிமுக போட்டியிட வாய்ப்பு கிடைத்துள்ள நிலையில், அதற்கு வசதியாக திருச்சி கிழக்கு தொகுதியை ஒதுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மதிமுக வினரிடையே ஏற்பட்டுள்ளது.

கடந்த மக்களவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் மதிமுகவுக்கு ஒரு இடம் மட்டுமே ஒதுக்கப்பட்டது. திமுகவின் உதயசூரியன் சின்னத்தில் நிற்க வலியுறுத்தப்பட்ட நிலையில், தனி சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்பதற்காக மதிமுக முதன்மை செயலாளர் துரை வைகோ வாதாடி, போராடி தீப்பெட்டி சின்னத்தில் நின்று வெற்றி பெற்றார்.

அதைத்தொடர்ந்து மதிமுக மாநிலக்கட்சி அங்கீகாரம் பெற சட்டப்பேரவைத் தேர்தலில் 12 இடங்களில் தனிச் சின்னத்தில் போட்டியிட வேண்டிய கட்டாயம் இருந்தது. ஆனால் திமுக கூட்டணியில் வெறும் 4 தொகுதிகள் மட்டுமே மதிமுகவுக்கு ஒதுக்கிய நிலையில், அதில் ஒரு தொகுதியில் மட்டுமே சொந்த சின்னத்தில் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

வெறும் 4 தொகுதி என்பதால் மதிமுக கேட்கும் தொகுதிகளை ஒதுக்க வேண்டும் என திமுகவிடம் அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

திமுக வழங்கிய சீட்டுகள் எண்ணிக்கை மதிமுகவின் நிர்வாகிகள், தொண்டர்களுக்கு கடும் அதிருப்தியை அளித்திருந்தாலும், அவர்கள் கொடுத்திருக்கும் தனிச்சின்னம் என்ற வாய்ப்பை சரியாக பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றனர்.

அதன்படி, திருச்சி மக்களவைத் தொகுதியில் வாக்காளர்களுக்கு தீப்பெட்டிச் சின்னம் நன்கு அறிமுகமாகி உள்ளது என்பதால், இந்த மக்களவை தொகுதிக்கு உட்பட்ட திருச்சி கிழக்கு தொகுதியை தங்களுக்கு ஒதுக்க வேண்டும் என திமுக தலைமையிடம் மதிமுக வலியுறுத்தி வருவதாக கூறப்படுகிறது.

திருச்சி மாவட்டத்தில் உள்ள 9 தொகுதிகளையும் தன்வசம் வைத்துள்ள திமுக, ஒரு தொகுதியை விட்டுத் தர முன்வருமா?. மலைக்கோட்டை மாவட்டத்தில் கிழக்கு தொகுதியில் மதிமுகவின் தீப்பெட்டி பற்றுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# தெற்கிலிருந்து கிளம்பும் ஆதரவுக் குரல்! திமுக கூட்டணிக்குத் தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கம் நிபந்தனையற்ற ஆதரவு



சின்னாளபட்டி, மார்ச். 22-

தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்க நிறுவனர் எஸ்.கிருபாகரன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அறிவாலயத்தில் நேரில் சந்தித்து 2026 சட்டமன்ற தேர்தலுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியதுடன், தென் மாவட்டங்களில் திமுக கூட்டணி வெற்றிக்கு தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கம் உறுதுணையாக இருக்கும என நிறுவனத் தலைவர் கிருபாகரன் பேசினார்.

திராவிட மாடல் அரசின் எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலை ஆத்தூர் தொகுதியில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்ட கிருபாகரன், சின்னாளபட்டியில் பிரமாண்டமாக தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கத்தின் முப்பெரும் விழாவை நடத்தி அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் மூலம் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அதன் பின்னர் அண்ணா அறிவாலயத்தில் தமிழக முதல்வரும், திராவிட மாடல் ஆட்சி நாயகருமான திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து, வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணிக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியதுடன், திமுக கூட்டணியின் வெற்றிக்கு பிரச்சாரம் செய்வதாக ஆதரவு கடிதம் வழங்கினார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கத்தின் நிறுவனத் தலைவர் கிருபாகரன் அவர்களை பாராட்டியதோடு இளைஞர்கள் அரசியல் பணிக்கு வரவேண்டுமென வாழ்த்தினார். நிகழ்ச்சியின்போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், திமுக பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர் கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர் ஐ.பெரியசாமி, உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தலைமை நிலைய அலுவலக செயலாளர் பூச்சி.எஸ்.முருகன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

திமுக கூட்டணிக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியது குறித்து தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்க தலைவர் எஸ்.கிருபாகரன் கூறுகையில், நான் ஆத்தூர் தொகுதியின் கொடைவள்ளல், ஐ.பெரியசாமி அவர்களின் செயல்பாடுகளை பார்த்து அரசியலுக்கு வந்தவன். ஆத்தூர் தொகுதியில் அனைவரையும் சமமாக மதிக்கும் அரசியல் வாதியாக ஐ.பெரியசாமி உள்ளார்.

இதுபோல தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமை யிலான திராவிட மாடல் அரசும் எல்லோருக்கும், எல்லாம் என்ற நிலையுடன்தான் செயல்பட்டு வருகிறது. மீண்டும் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நல்லாட்சி தொடர நாங்கள் வரும் சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணிக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியுள்ளோம். விரைவில் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்க உள்ளேன் என்றார்.

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் மார்ச் 24 வரை மிதமான மழை வாய்ப்பு



சென்னை, மார்ச்.22-

தமிழகத்தில் நாளை முதல் மார்ச் 24ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மன்னார் வளைகுடா முதல் வடக்கு உள் கர்நாடகம் வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (மார்ச் 22) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும், 23, 24 தேதிகளில் கோவை, நீலகிரி மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும்.

25, 26 தேதிகளில் தமிழகம், புதுச்சேரியில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 27ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளை அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவிலும், 23, 24 தேதிகளில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர்ந்தும் இருக்கும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 93 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 79 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டியும் இருக்கும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டம் சுருளக்கோடு, மாம்பழத்துறையாறு, அணைகெடங்கு ஆகிய இடங்களில் தலா 3 செமீ, திருநெல்வேலி மாவட்டம் ஊத்து, நாலுமுக்கு, மதுரை மாவட்டம் சாத்தியார், விருதுநகர் மாவட்டம் சிவகா, கன்னியாகுமரி மாவட்டம் பெருஞ்சாணி அணை ஆகிய இடங்களில் தலா 2 செமீ மழை பதிவாகியுள்ளது

# புதுச்சேரியில் வேட்பு மனு தாக்கல் இன்னும் ஒருநாள் மட்டுமே... இண்டியா கூட்டணியில் இழுபறி



புதுச்சேரி, மார்ச். 22-

புதுச்சேரியில் வேட்பு மனு தாக்கலுக்கு ஒரு நாள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில், என்டிஏ கூட்டணி இறுதி செய்யப்பட்டு பாஜக வேட்பாளர்களை அறிவித்துள்ள சூழலில், இண்டியா கூட்டணியில் இழுபறி நீடிக்கிறது.

புதுவையில் 30 சட்டசபை தொகுதிக்கு கடந்த 16ஆம் தேதி வேட்பு மனு தாக்கல் தொடங்கியது. முதல் 2 நாட்கள் யாரும் வேட்பு மனு தாக்கல் செய்யவில்லை. அதையடுத்து மனுக்களை தாக்கல் செய்து வருகின்றனர்.

என்டிஏ கூட்டணியில் தொகுதிப் பங்கீடு நேற்று முடிந்தது. அதற்கு முன்பாகவே என்.ஆர். காங்கிரஸ் தரப்பில் பலர் மனு தாக்கல் செய்தனர். பாஜக வேட்பாளர்கள் இன்று அறிவிக்கப்பட்டனர். பாஜக, அதிமுக, லஜக தரப்பில் திங்கள்கிழமை மனு தாக்கல் செய்கின்றனர். அதேபோல் நாம் தமிழர் கட்சியினரும் மனு தாக்கல் செய்தனர்.

அதே நேரத்தில் இண்டியா கூட்டணி காங்கிரஸ் திமுக இடையே இழுபறி நீடிக்கிறது. எனினும் இக்கட்சியினர் முன்பாகவே பல தொகுதிகளில் அவர்களாகவே மனு தாக்கல் செய்து வருகின்றனர். இரு கட்சியினர் இடையே அதிக தொகுதி மற்றும் தலைமை யார் என்பதில் தொடரும் பிரச்சினையே இந்த இழுபறிக்கு காரணம்.

இரு கட்சிகளின் தலைமையும் இதில் தலையிட்டு இண்டியா கூட்டணி பங்கீடு இன்று முடியும் என பலரும் எதிர்பார்க்கின்றனர்.

ரம்ஜான் பண்டிகையையொட்டி இன்று புதுவை, காரைக்கால், ஏனாம் பிராந்தியங்களில் அரசு விடுமுறை என்றும் அரசிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனால் கடைசி நாளான 23ம் தேதி மட்டுமே வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்ய முடியும். மாஹே தொகுதியில் மட்டும் இன்று மனு தாக்கல் செய்யலாம்.

முக்கியக் கூட்டணிகளில் வாய்ப்பு கிடைக்காதோர் சுயேட்சையாகவும் போட்டியிட திட்டமிட்டுள்ளனர். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களின் மனுவுடன் பல்வேறு முக்கிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

வருவாய் துறையில் சாதி சான்றிதழ், வரி நிலுவையில்லா சான்று, உள்ளாட்சியில் சொத்து வரி, குடிநீர் வரி, மின் துறையில் கட்டண பாக்கி இல்லை என்பதற்கான தடையில்லா சான்று மற்றும் போலீஸில் வழக்கு ஏதும் இல்லா சான்றிதழ் என பல சான்றிதழ்கள் இணைக்க வேண்டும் என்பதால் பலரும் அதை தயார் செய்வதில் மும்முரமாகவுள்ளனர். வரும் திங்களன்று அதிகளவில் பலரும் மனு தாக்கல் செய்ய வாய்ப்புள்ளது. இந்தச் சூழலில் இண்டியா கூட்டணியில் மட்டும் இழுபறி நீடித்து வருகிறது.

# புளியங்குடி: முறையான வடிகால் வசதியின்றி சாலை அமைக்க எதிர்ப்பு பொதுமக்கள் கோரிக்கை





தென்காசி மார்ச். 22-

தென்காசி மாவட்டம், புளியங்குடி நகராட்சிக்கு உட்பட்ட 29வது வார்டு விநாயகர் கோவில் தெருவில், முறையான கழிவுநீர் வடிகால் வசதி செய்யாமல் தார் சாலை அமைக்கும் பணிக்கு பொதுமக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களின் குற்றச்சாட்டு:

இந்த பகுதியில் நீண்ட நாட்களாக கழிவுநீர் வடிகால் (சாக்கடை) வசதி இல்லாததால், மழைக்காலங்களில் சாலைகளில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இதனால் அப்பகுதியில் கொசுக்கள் உற்பத்தியாகி, சுகாதாரச் சீர்கேடு மற்றும் நோய் தொற்று பரவும் அபாயம் உள்ளதாக அப்பகுதி மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

நகராட்சிக்கு பலமுறை கோரிக்கை:

தார் சாலை போடுவதற்கு முன்பாக, இப்பகுதியில் அவசியமான கழிவுநீர் வடிகால் வசதியை ஏற்படுத்தி தர வேண்டும் என்று நகராட்சி நிர்வாகத்திடம் பொதுமக்கள் பலமுறை மனு அளித்துள்ளனர். இருப்பினும், தங்களின் நீண்ட நாள் கோரிக்கையை அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை என்று குற்றம் சாட்டுகின்றனர்.

திரண்ட பொதுமக்கள்:

தற்போது வடிகால் வசதி ஏற்படுத்தாமல் சாலை பணிகளை மேற்கொள்ள முயற்சிப்பதை எதிர்த்து, அந்தப் பகுதி பொதுமக்கள் ஒன்று திரண்டு தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். "முதலில் கழிவுநீர் வடிகால் அமைத்து, அதன் பிறகு தரமான தார் சாலை அமைத்துத் தர வேண்டும்" என்பதே அப்பகுதி மக்களின் ஒற்றைக் கோரிக்கையாக உள்ளது.

பொதுமக்களின் நலன் கருதி, நகராட்சி நிர்வாகம் உடனடியாக இப்பிரச்சினையில் தலையிட்டு, முறையான வடிகால் வசதியுடன் சாலையை அமைத்துத் தர வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# "இடதுசாரி, காங். ஆட்சி மீது கேரளம் மக்கள் சலிப்பு" ராஜஸ்தான் முதல்வர் கருத்து

திருவனந்தபுரம், மார்ச்.22-

கடந்த இருப்பது ஆண்டுகால இடதுசாரி மற்றும் காங்கிரஸ் ஆட்சியின் மீது கேரளம் மக்கள் சலிப்படைந்துள்ளனர் என ராஜஸ்தான் முதல்வர் பஜன்லால் சர்மா தெரிவித்துள்ளார்.



கேரளம் மாநில தேர்தலை முன்னிட்டு அவர் சனிக்கிழமை அன்று திருவனந்தபுரம் வந்திருந்தார்.

அப்போது செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது: "நான் இன்று திருவனந்தபுரத்தில் உள்ளேன். எங்கள் கட்சியின் மாநில தலைவர் உட்பட நான்கு பேர் இன்று தங்கள் வேட்பு மனுவை தாக்கல் செய்தனர். எங்கள் கட்சியின் உறுப்பினர்கள் உற்சாகத்துடன் தேர்தல் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

இங்கு கடந்த 20 ஆண்டுகால ஊழல் நிறைந்த இடதுசாரி மற்றும் காங்கிரஸ் ஆட்சியின் மீது கேரளம் மக்கள் சலிப்படைந்துள்ளனர். அதே நேரத்தில் மக்கள் பாஜக மீது நம்பிக்கை வைத்துள்ளனர். மக்கள் பிரதமர் மோடியை நம்புகின்றனர். இங்குள்ள வளர்ச்சி பணிகளுக்கு அவரே காரணம். பாஜக ஆதரவு இல்லாமல் இங்கு மாநில அரசு அமையாது என்பதை நாங்கள் சொல்வோம். இங்கு பாஜக வலுவடைந்துள்ளது. மற்ற மாநிலங்களை போலவே கேரளம் வளர்ச்சி காணும்" என தெரிவித்தார்.

140 தொகுதிகள் கொண்ட கேரளம் மாநில சட்டப்பேரவை தேர்தல் வரும் ஏப்.9ம் தேதி அன்று நடைபெறுகிறது. வரும் 23ம் தேதி உடன் வேட்பு மனு தாக்கல் நிறைவடைகிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி (எல்டிஎஃப்), காங்கிரஸ் கட்சி தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி (யுடிஎஃப்), பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி (என்டிஏ) மற்றும் வேறு சில கட்சிகள் தேர்தலில் போட்டியிடுகின்றன.

# "பனையேறும் தொழிலாளர்களை போலீஸ் தேடித் தேடி வேட்டையாடுவது வெட்கக் கேடானது" சீமான்



சென்னை, மார்ச்.22-

"திருச்சி காவல் துறையினர், பனைத் தொழிலாளர்களைக் கடுமையாகத் தாக்கி, பொய் வழக்கில் சிறையில் அடைத்திருப்பது கொடுங்கோன்மையாகும்" என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'திருச்சி மாவட்டத்துக்கு உட்பட்ட லால்குடி, மண்ணச்சநல்லூர் பகுதிகளில் 'கள்' இறக்கும் பணியில் ஈடுபட்ட பனைத் தொழிலாளர்களான சின்னையன், துரைசாமி, கணேசன் ஆகியோரை, திருச்சி மாவட்டம் சமயபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சந்திரசேகர் தலைமையிலான காவல் துறையினர் மிரட்டி, கடுமையாகத் தாக்கி கைது செய்துள்ள நிகழ்வு வன்மையான கண்டனத்துக்கு உகுரியது.

'கள்' இறக்கும் எளிய மனிதர்களைக் கொடிய குற்றம் புரிந்த பயங்கரவாதிகள்போல ஆடைகளைக் களைந்து, அவமதித்து, உள்ளாடைகளுடன் திருச்சி காவல் துறையினர் சிறையில் அடைத்து வைத்திருப்பது கொடுங்கோன்மையாகும்.

மருத்துவக் குணமுடைய பொருட்களுக்கு தடை விதிக்க கூடாது என்கிறது இந்திய அரசமைப்புச் சட்டம். கள் சித்த மருத்துவத்தில் மருந்தாக பயன்படுத்தபடும் நிலையில், அதற்கு தமிழ்நாடு அரசு தடை விதித்திருப்பது அரசமைப்புக்கு எதிரானது.

'தேசிய ஊட்டச்சத்து ஆராய்ச்சி நிறுவனம் பனங்கள்ளை உணவாக வகைப்படுத்தி, உணவுக் குறியீடு "ரி001" வழங்கியுள்ளது. கேரளா உள்ளிட்ட மாநிலங்கள் கள்ளை தங்களின் சிறப்பு உணவுப் பட்டியலில் வகைப்படுத்தியுள்ளன.

உலகின் பல நாடுகளும் தங்களின் பாரம்பரிய உணவாக கள்ளை பயன்படுத்துகின்றன. இந்தியாவில் பல மாநிலங்களில் கள் இறக்கத் தடை இல்லாதபோது, தமிழ்நாட்டில் மட்டும் தடை எதற்கு?

கள்ளின் மீதான தடையை நீக்க நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட அமைப்புகள் தொடர்ச்சியாகப் போராடி வரும் நிலையில், காவல் துறையின் அதிகார அத்துமீறல்கள் எவ்வகையிலும் ஏற்புடையதல்ல.

அதிலும், தற்போது திருச்சியில் கைது செய்யப்பட்டுள்ள பனைத் தொழிலாளர்கள் எளிதில் பிணையில் விடுதலை ஆகிவிடக் கூடாது என்பதற்காக, உள்நோக்கத்துடன் 'நச்சு கலந்த கள்ளை விற்பனை செய்ததாக' சமயபுரம் காவல் துறையினர் பொய் வழக்கு புனைந்துள்ளது எதேச்சாதிகாரப் போக்கின் உச்சமாகும்.

கள்ளை முறையான ஆய்வுக்கு உட்படுத்தாமலே அதில் நச்சு கலந்தது என்ற முடிவுக்குக் காவல் துறை வந்தது எப்படி? இதிலிருந்தே காவல் துறையின் வழக்கு மற்றும் கைது நடவடிக்கைகள் யாவும் முற்றிலும் புனையப்பட்ட நாடகம் என்பது உறுதியாகிறது.

உடலுக்கு எந்தத் தீங்கும் செய்யாத 'கள்ளை' போதைப்பொருள் என்று தடை செய்துள்ள தமிழ்நாடு அரசு, தன்னுடைய நேரடி நிர்வாகத்தில் டாஸ்மாக்கில் விற்பதற்குப் பெயர் என்ன? புனித தீர்த்தமா?

அரசு நடத்தும் மதுக்கடைகளில் மது அருந்துவோருக்குப் பாதுகாப்பாக காவலுக்கு நிற்கும் தமிழ்நாடு காவல்துறையினர், 'கள்' இறக்கும் எளிய தொழிலாளர்கள் மீது பொய் வழக்கு புனைந்து சிறையில் அடைப்பதற்கு வெட்கித் தலைகுனிய வேண்டும்.

கஞ்சா, அபின் உள்ளிட்ட போதைப்பொருள் விற்பனையையும், அதன் காரணமாகத் தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் நாள்தோறும் நடைபெறும் படுகொலைகள், பாலியல் வன்கொடுமைகள் உள்ளிட்ட கொடுங்குற்றங்களைத் தடுக்கவோ, குற்றவாளிகளைப் பிடிக்கவோ திறனற்ற காவல் துறை, பனையேறும் தொழிலாளர்களைத் தேடித் தேடி வேட்டையாடுவது வெட்கக் கேடானது.

அப்பாவிகள் மீது பொய் வழக்கு புனைந்து கைது செய்வதில் காட்டும் வேகத்தையும், ஆர்வத்தையும், குற்றங்களைத் தடுப்பதிலும் கஞ்சா விற்பனையைக் கட்டுப்படுத்துவதிலும் காட்டியிருந்தால், சட்டம் ஒழுங்கு எப்போதோ சீரடைந்திருக்கும். சங்க காலம் தொட்டுத் தமிழ் மக்களின் பயன்பாட்டில் உள்ள 'கள்', எங்களின் பாரம்பரிய உணவு மட்டுமல்ல, அது எங்களின் உரிமையுமாகும்.

ஆகவே, திருச்சி மாவட்டம் இலால்குடி மற்றும் மண்ணச்சநல்லூர் பகுதிகளில் 'கள்' இறக்கும் பணியில் ஈடுபட்டதற்காக, பொய் வழக்கு புனைந்து கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மூன்று பனைத் தொழிலாளர்களையும் தமிழ்நாடு காவல்துறை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# தென்காசி: ஏப்ரல் 1ல் உள்ளூர் விடுமுறை மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு!



தென்காசி மார்ச். 22-

தென்காசி மாவட்டத்தில் பங்குனி உத்திர திருவிழாவை (01.04.2026) முன்னிட்டு, அன்று மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு உள்ளூர் விடுமுறை அறிவித்து மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர் ஆணை யிட்டுள்ளார்.முக்கியக் குறிப்புகள்:தேர்வுகள்: பொதுத்தேர்வு எழுதும் மாணவர்கள் மற்றும் தேர்வுப் பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு இந்த விடுமுறை பொருந்தாது.தேர்தல் பணி: வேட்புமனு தாக்கல் மற்றும் தேர்தல் தொடர்பான பணிகள் வழக்கம்போல் தடையின்றி நடைபெறும். ஈடு செய்யும் நாள்: இந்த விடுமுறையை ஈடு செய்ய 11.04.2026 (சனிக்கிழமை) அன்று மாவட்டத்திற்கு வேலை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.



# மதுரை தமுக்கம் மைதானத்தில்ரம்ஜான் பண்டிகை சிறப்பு தொழுகைஏராளமானோர்பங்ககற்பு



மதுரைமார்ச் 22-

ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு ஜாக் அமைப்பின் சார்பில்

மதுரையில் பல்வேறு இடங்களில் சிறப்பு தொழுகை நடைபெற்றது. இதில் பெண்கள் குழந்தைகள் உட்பட ஏராளமான கலந்து கொண்டு சிறப்பு துசெய்தனர்.இஸ்லாமியர் களின்ஜம்பெரும்கடமைக ளில்ஒன்றுரமலான்மாதநோ நான்பாகும்.

இந்த மாதத்தில் 30நா ட்களும்அதிகாலைமுதல் மாலைவரைஉணவுஉண் ணாமல், நீர்அருந்தாமல் இஸ்லாமியர்கள் நோன்பினை கடைப்பிடிப்பர். இஸ்லாமியர்கள் மற்றொரு கடமையானஏழைஎளிநோ யாருக்குஜகாத்என்னும் உதவிகளைவழங்கிவ ருவர். ரமலான் 30நோன்பு முடிவடைந்தபின், ஷவ்வ ால்மாதத்தின்முதல்நாளி ல்ரமலான்பண்டிகைகொ ாண்டாடுவர்.இதன்படி நேற்றுவ ளைகுடா நாடுகள்மற்றும்கேரளம் மாநிலத்தில் ரம்ஜான் பண்டிகை கொண்டாடப்பட்டது. இந்த நிலையில் அதனைப் பின்பற்றி மதுரை மாவட்டம் ஜாக் அமைப்பின் சார்பில் மதுரை தமுக்கம் மைதானத்தில் ரமலான் சிறப்பு தொழுகை நடைபெற்றது. இதில் பெண்கள் சிறுவர்கள் உட்பட ஏராளமூர் கலந்து கொண்டனர். இதே போல் வில்லாபுரம் தெற்கு வாசல் ஆகிய பகுதியில் உள்ள திடல்களில் ஜாக் அமைப்பினர் சார்பில் ஏராளமான இஸ்லாமியர்கள் பெருநாள் சிறப்பு தொழுகை ஈடுபட்டனர். மதுரை புறநகர் பகுதிகளிலும் சிறப்பு தொழுகை முடிந்து இஸ்லாமியர்கள் ஒவ்வொருக்கொருவர் கை கொடுத்தும் ரம்ஜான் வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டனர். சிறப்பு தொழுகையின் முடிவில் சமத்துவம் நிலவ வேண்டிய போர் சூழல் நீங்கி உலக அமைதியை பெற வேண்டிய மலை பொலிவு வேண்டியும் விவசாயம் செழிக்க வேண்டியும் சிறப்பு துஆ செய்தனர்.ஈதுல் பித்ர்என்னும்பெருநாள் சிறப்பு தொழுகையை திறந்து வெளி திடல்களில் தொழுவது கூடுதல் சிறப்பு என்பதால் பல்வேறு பகுதிகளி ல் தேடல்களிலும் சிறப்பு தொழுகை நடைபெறும். தொழுகைக்கு செல்வதற்கு முன்பாக ஏதாவது ஒரு ஏழைக்கு உதவி செய்ய வேண்டும் அடிப்படையில் 10 என்னும் உதவியை வழங்கிவிட்டு தொழுகையில் ஈடுபட்டனர்.



# பெரியஊர்சேரிகிராமத்தில் அமைந்துள்ள பள்ளிவாசலில் ரம்ஜானை முன்னிட்டு எஸ்டிபிஜ சார்பில் சிறப்பு தொழுகை

அலங்காநல்லூர்மார்ச். 22

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள பெரியஊர்சேரி கிராமத்தில் அமைந்துள்ள ஜிம்மா பள்ளிவாசலில் ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு இஸ்லாமிய பெருமக்கள் கலந்து கொண்ட தொழுகை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த விழாவிற்கு எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநிலத் தலைவர் நெல்லைமுபாரக், மாவட்டத் தலைவர் பிலாலு தீன்,ஆலோசனையின் பேரில் சோழவந்தான் தொகுதி தலைவர் அப்துல்ரகுமான், இணைச் செயலாளர்சையதுஒலி,அலங்கை ஒன்றிய தலைவர் பாகர்உசேன்,மற்றும் பள்ளிவாசல் நிர்வாகிகள் இஸ்லாமிய பெருமக்கள் கலந்து கொண்டனர்.



# பழைமை மாறாத பண்பாடு! செங்கோட்டை 110 வருட மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாசலில் பிரம்மாண்டத் தொழுகை

தென்காசி : மார்ச்.22-

தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் இஸ்லாமியர்களின் ஈத் பெருநாள் தொழுகை செங்கோட்டை மஸ்ஜிதுன் நூர் ஜூம் ஆ பள்ளிவாசலில் தலைமை இமாம் மவுலவி அபூபக்கர் சித்திக் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது . செங்கோட்டை தஞ்சாவூர் பள்ளிவாசல் 110 வருட பழமையான பள்ளிவாசல் ஆகும் இப்பள்ளியில் சுமார் 2500 க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் வசித்து வருகின்றனர் மிகவும் பழமையான பள்ளிவாசல் என்பதால், இங்கு நடைபெறும் தொழுகை மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

நோன்பு பெருநாளில் 30 நாட்களும் நோன்பு இருந்து இன்றைய தினம் பெருநாள் தினமாக அனுசரிக்கப்பட்டு காலை 8 மணிக்கு சிறப்பு தொழுகை நிறைவேற்றப்பட்டது. இதில் சுமார் 2000க்கும் மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் சிறப்பு தொழுகை ஈடுபட்டனர்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு ஏற்பாடுகளை பள்ளிவாசல் தலைவர் முகைதீன் பிச்சை என்ற முதலாளி செயலாளர் திவான் அகமது ஷா, சேட் துணைத் தலைவர் அக்பர் பாதுஷா, பொருளாளர் காதர் மைதீன், கமிட்டி உறுப்பினர்கள் முகமது ஜாபர் ஆகியோர் சிறப்பான ஏற்பாடுகளை செய்து இருந்தனர். தொழுகையின் இறுதியில் சிறப்பு துவா ஓதப்பட்டு இனிப்புகள் வழங்கப்பட்டன. இஸ்லாமியர்கள் தொழுகையின் முடிவில் ஒருவரை ஒருவர் ஆரத்தழுவி, ஈத் பெருநாள் வாழ்த்துக்களை தெரி வித்துக் கொண்டனர்.



■ மதுரை, அல் அமீன் நகர் மஸ்ஜிதுல் முஸ்தஃபா வல் மதரஸா பள்ளிவாசலில் நோன்புப் பெருநாள் தொழுகை நடைபெற்றது. உலக அமைதிக்காகவும் மனித நேயத்திற்காகவும், சகோதரத்துவத்திற்காகவும் துஆ செய்து வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்ட இஸ்லாமிய சகோதரர்கள் . இந்நிகழ்வில் பள்ளிவாசல் இமாம் மற்றும் இஸ்லாமிய சகோதரர்கள்.

# புளியங்குடியில் ரம்ஜான் சிறப்பு தொழுகை ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் பங்கேற்பு





புளியங்குடி: மார்ச். 22-

இஸ்லாமியர்களின் முக்கிய பண்டிகையான ரம்ஜான் பெருநாள் (சனிக்கிழமை) தமிழகம் முழுவதும் உற்சாகமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு, தென்காசி மாவட்டம் புளியங்குடியில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் (TNTJ) மேற்கு கிளை சார்பாகச் சிறப்புத் தொழுகை நடைபெற்றது. தொழுகை விவரங்கள்: இடம்: புளியங்குடி மேற்கு கிளை பள்ளிவாசல் திடல். நேரம்: இன்று காலை 6:50 மணி.

பங்கேற்பு: இந்தச் சிறப்புத் தொழுகையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இஸ்லாமிய ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டு இறைவனை வழிபட்டனர். முக்கிய அம்சங்கள்:இந்த நிகழ்வு தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்தின் மாவட்ட மற்றும் கிளை நிர்வாகிகள் முன்னிலையில் மிகச் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டது. தொழுகையின் முடிவில் உலக அமைதி மற்றும் சகோதரத்துவத்திற்காகப் பிரார்த்தனைகள் செய்யப்பட்டன. தொழுகை முடிந்தபின், இஸ்லாமியர்கள் ஒருவருக்கொருவர் கட்டித்தழுவி ரம்ஜான் வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

# கோதாவரி ஆற்றில் 2 மாணவர்கள் உயிரிழப்பு



பத்ராச்சலம், மார்ச். 22-

ஆந்திர மாநிலம் அமராவதியில் கல்லூரியில் படிக்கும் 7 மாணவர்கள் தெலங்கானா மாநிலம், பத் ராச்சலம் அருகே உள்ள கூனவரம் எனும் பகுதிக்கு சென்றனர். அங்கு நேற்று காலை கோதாவரி நதியில் நீந்தினர்.

இந் நிலையில் ஆழமான பகுதிக்கு சென் றதால் 5 பேர் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டனர். தப்பிய இரு மாணவர்கள் அளித்த தகவலின்பேரில் படகுகள் மூலம் தேடும் பணி தொடங்கியது. இதில் ஸ்ரீதர், அபிராம் ஆகிய இரு மாணவர்கள் சடலமாக மீட்கப்பட்டனர். தேஜு, நவதீப், சதீஷ்குமார் ஆகிய 3 பேரை தேடும் பணி தொடர்கிறது.



















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000